(உ) மணப்பாறை வட்டத்தை புதுக்கோட்டை மாவட்டத்துடன் இணைக்கத் தேவையில்லை என அரசு தீர்மானித்துள்ளது.

*Representation of Labourers Munnetra Sangam in the Tripartite Discussions being held in Delhi on the fixation of salaries for the labourers in Sugar Mills.*

4 *S.N.Q.*—THIRU KATTOOR GOPAL: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the Government have received any representation on the imperative need for the representation of the Labourers Munnetra Sangam, the Central Association of Trade Unions, having the majority of labourers working in Sugar Mills in Tamil Nadu as member, in the Tripartite Discussions being held in Delhi on the fixation of salaries for the labourers working in sugar mills;

(*b*) if so, the action taken thereon; and

(*c*) the benefits thereof?

**டெல்லியில் நடைபெற்று வருகிற சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் ஊதிய நிர்ணயம் குறித்த முத்தரப்புப் பேச்சு வார்த்தையில் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு பிரதிநிதித்துவம்.**

திரு. காட்டூர் கோபால்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) டெல்லியில் நடைபெற்று வருகிற சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்கள் ஊதிய நிர்ணயம் குறித்த முத்தரப்புப் பேச்சு வார்த்தையில் தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளின் தொழிலாளர்களில் மிகப் பெரும்பான்மையானவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வருகிற தொழிற்சங்கங்களின் மத்திய நிறுவனமாகிய தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவைக்கு பிரிதிநிதித்துவம் அளிக்கப்பட்டாக வேண்டியதன் அவசியம் குறித்து அரசுக்கு முறையீடு ஏதும் வரப் பெற்றதா?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாது?

(உ) அதனால் ஏற்பட்ட பலன்கள் என்ன?

1973 டிசம்பர் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) & (உ) சமீபத்தில் நான் புதுடில்லிக்குப் போயிருக்கும்பொழுது இதைக் குறித்து மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சரிடம் பேசினேன். இதைத் தொடர்ந்து மத்திய அரசு தொழிலாளர் நல அமைச்சரவர்களுக்கு நான் ஒரு நேர்முகக் கடிதமும் அனுப்பியிருக்கிறேன். மத்திய அரசின் முடிவை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம்.

திரு. காட்டூர் கோபால் : தலைவர் அவர்களே, எற்கெனவே தொழிலாளர் களுடைய ஊதியக் குழு பேச்சுவார்த்தைகள் நடந்தபோதும், இது மாதிரி பேரவையினுடைய பிரதிநிதித்துவம் புறக்கணிக்கப்பட்டிருக் கின்றது. இதில் அரசியல் நோக்கம் இருப்பதாக தொழிலாளர்கள் கருதுகின்றார்கள். இதில் அரசாங்கம் ஆய்வு நடத்துமா ? இதற்கு அரசாங்கம் என்ன செய்ய இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இந்தப் பேச்சு வார்த்தைகளிலே ஆய்வுக்கு அனுப்ப வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கின்றோம். இதில் அரசியல் நோக்கு எதுவும் இருப்பதாக எனக்குப் படவில்லை. எப்படியும் நம்முடைய முயற்சியிலே வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

திரு. காட்டூர் கோபால் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசியல் நோக்கம் இல்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் இன்றையதினம் தினப் பத்திரிகையில் மத்திய தொழிலாளர் சம்மேளன சங்கங்கள்—இரண்டு சங்கங்களுக்கு இடையிலே எந்தச் சங்கம் சொல்கிறபடி ஊதியம் அளிப்பது என்பதிலே சர்ச்சை இருக்கின்ற காரணத்தினாலே, இதிலே ஆய்வு நடத்தமுடியாமல் இருக்கின்றது என்ற செய்தி வெளியாகியிருக் கின்றது. இதுபற்றி நம்முடைய அரசுக்கு ஏதேனும் தெரியுமா ?

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தினப்பத்திரிகையில் வருகிற எல்லாவற்றையும் நம்பிவிட முடியாது.

திரு. காட்டூர் கோபால் : இந்தச் சேதி பற்றி அரசாங்கத்துக்கு ஏதாவது தகவல் வந்துள்ளதா ? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதனை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதுவரை யிலே அப்படிப்பட்ட தகவல்கள் எதும் அரசுக்கு வரவில்லை.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

குறிப்பு ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும். உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.